# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 08 | 22-03-2003 | சனிக்கிழமை | ஓசை 32



மண விழாக்களை மகிழ்வுடன் கொண்டாட மனதிற்கினிய ஆடைத்தெரிவுக்கு

சாந்தா ரெக்ஸ்

பஜார் வீதி, வவுனியா

T.P:24-22879


## புனர்வாழ்வுப் பணிகளுக்காக

# உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலுக்கு ஆதரவு வழங்குவது குறித்து பரிசீலிக்கவுள்ளோம்!

## ஜப்பான் பேச்சு வார்த்தை முடிவில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

[டோக்கியோ]

**வடக்குக் கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் செம்மையான முறையில் நிர்வகிக்கப்பட்டால் பல வேலைத் திட்டங்களை அந்த உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் செய்யலாம் என்ற நோக்கத்தில் நாங்கள் உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆதரவு வழங்குவது பற்றி பரிசீலனை செய்வோம் என முடிவு செய்திருக்கின்றோம் என அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

ஹைக்கோன் நகரில் கடந்த நான்கு நாட்கள் நடைபெற்ற ஆறாம் சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்;

கேள்வி: இப்பேச்சுக்களில் உள்ளூராட்சித் தேர்தலை வடக்கு கிழக்கில் நடத்துவதற்கு சிறிலங்கா அரச பிரதிநிதிகள் ஒரு கோரிக்கையை விடுத்திருந்தனர் இதற்கு விடுதலைப் புலிகள் எத்தகைய நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றனர்?

பதில்: இது பற்றி பேராசிரியர் பீரிஸ் அவர்களுடன் பேசினோம். அவர் இது சம்பந்தமாக ஒரு புதிய சட்டவாக்கம் ஒன்றைக் கொண்டுவரவிருக்கிறார். அதாவது முன்பு வேட்பு மனுத்தாக்கல் செய்தவர்களெல்லாம் இந்த புதிய சட்டவாக்கத்தின் பின்னர் அவர்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வாரத்தில் ஏழு நாட்களும் ஏ-9 பாதை திறக்கப்படும்!

(அலுவலக செய்தியாளர்)

வாரத்தில் ஏழு நாட்களும் ஏ-9 கண்டி நெடுஞ்சாலை மக்கள் போக்குவரத்திற்குத் திறந்து விடப்படவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 01ஆம் திகதி முதல் ஓமந்தைச் சோதனைச் சாவடியையும், முகமாலை சோதனைச்சாவடியையும் வாரத்தில் ஏழு நாட்களும் மக்கள் போக்குவரத்திற்கு திறந்துவிடுவது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பா)

## ஏப்ரல் 29 இல் அடுத்த சுற்றுப்பேச்சு

(டோக்கியோ)

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை ஏப்ரல் 29ஆம் திகதியில் இருந்து மே-2ஆம் திகதி வரை தாய்லாந்தில் இடம் பெறவுள்ளது.

எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஜப்பானில் யூன் மாதம்

(08ஆம் பக்கம் பார்க்க)




## விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் கிரோஷிமாவைப் பார்வையிடுவர்!

ஜப்பானின் ஆறாவது சுற்றுப் பேச்சுக்களில் கலந்துகொண்ட விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் இன்று, இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டு வீசி அழிக்கப்பட்ட நகர்களில் ஒன்றான கிரோஷிமாவைப் பார்வையிடவுள்ளனர்.

கிரோஷிமா அழிவு நினைவாலயத்தை பார்வையிடுவதுடன் கிரோஷிமா அணுகுண்டு நினைவாலயம் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள அரும் பொருட்காட்சிச்சாலையையும் பார்வையிடவுள்ளனர்.

தொடர்ந்து இவர்கள் ஜப்பானில் மிக முக்கிய தொழில் நகரமான கியூட்டோ நகரத்துக்குச் சென்று அந்நகரத்தின் வளர்ச்சியைப் பார்வையிடவுள்ளனர்.

வரும் செவ்வாய்க்கிழமை டோக்கியோ நகரைச் சுற்றிப் பார்வையிடவுள்ளனர். இதன் வளர்ச்சி, தொழில்நுட்ப வல்லமை ஆகியவற்றைப் பார்வையிடுவர்.

எதிர்வரும் 27ஆம் திகதி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வன்னி திரும்பவுள்ளனர்.

## முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன மீன்பிடிக் கப்பல் மூழ்கடிப்பு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீனாவுக்குச் சொந்தமான மீன்பிடிக் கப்பலொன்று தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவுக் கடற்பரப்பிலிருந்து சுமார் 17 கடல்மைல் தூரத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் படகில் பயணம் செய்த 16 மாலுமிகள் காணாமல் போயிருப்பதாகவும், கடலில் தத்தளித்த ஒன்பது மாலுமிகளை அருகில் சென்ற மீன்பிடிப்படகு மீட்டிருப்பதாகவும் சிறிலங்கா கடற்படையின் பேச்சாளர் கப்டன் ஜெயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

## கப்பல் மூழ்கடிப்புக் குறித்த குற்றச்சாட்டுக்குப் புலிகள் மறுப்பு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

இச்சம்பவத்துக்கும், தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கப்பல் கப்டன் சிலம்பரசனின் நடுகல்லுக்கு கேணல் சூசை மலர் வணக்கம் செலுத்துகிறார்

## வணிகக் கப்பலில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு பல்வேறு இடங்களிலும் வீரவணக்க நிகழ்வுகள்

சர்வதேசக் கடற்பரப்பில் கடந்த 10 ஆம் திகதியன்று விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பலைச் சிறிலங்கா கடற்படை தாக்கியழித்த சம்பவத்தின்போது வீரச்சாவடைந்த 11 மாவீரர்களையும் நினைவுகூரும் நிகழ்வுகள் தமிழ்ப் பிரதேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன. இம் மாவீரர்களின் உருவப்படங்கள் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களின் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன் அனைத்துப் பகுதிகளிலும் வீரவணக்கக் கூட்டங்களும் நடைபெற்றன. அத்துடன் இம்மாவீரர்களிற்கான நினைவுக்கற்களும் திரைநீக்கம்செய்து வைக்கப்பட்டன. இச்சம்பவத்தில் வீரச்சாவடைந்த கப்பல் கப்டன் சிலம்பரசனின் திருவுருவப்படம் நேற்று மாலை இரண்டு மணியளவில் ஆழியவளையிலுள்ள அவரது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச்

(02ஆம் பக்கம் பார்க்க)

# ஆழியவளையில் நடைபெற்ற நடுகல் திரைநீக்க நிகழ்வு














## வணிகக் கப்பல்...

செல்லப்பட்டது. அங்கு இக்கப்பல் அழிக்கப்பட்ட சம்பவத்தில் வீரச்சாவடைந்த ஏனைய 10 மாவீரர்களின் திருவுருவப்படங்களும் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டமும். மலர் வணக்கமும் இடம்பெற்றது.

அதனையடுத்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டு ஆழியவளை அ.த.க.பாடசாலையில் வைக்கப்பட்டது.

அங்கு கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் பொதுச்சுடர் ஏற்றி வைக்க. கப்டல் கப்டன் சிலம்பரசனின் திருவுருவப்படத்திற்கு தந்தையார் வேலாயுதபிள்ளை. தாயார் அன்னம்மா. சகோதரன் ஜெயம்சபாபதி ஆகியோர் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர். வடமராட்சி கிழக்கு அரசியல் துறையைச் சேர்ந்த யாழ் மன்னன் தலைமையில் வீரவணக்க் கூட்டம் இடம்பெற்றது. நினைவுரைகளை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள். புனரமைப்புக்குழுத் தலைவர் பொன்னம்பலம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வின் சிறப்புரையினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஆற்றினார். அங்கிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்து வரப்பட்டு வடமராட்சி கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லத்தில் கப்பல் கப்டன் சிலம்பரசனின் நினைவுக்கல் சகல இராணுவ மரியாதைகளுடன் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. நினைவுக்கல்லினை சிலம்பரசனின் தந்தையும். தாயாரும் ஈகச்சுடரேற்றி திரைநீக்கம் செய்து வைத்து மலர்மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர். கடற்புலிகளின் சிறப்புத் தளபதி மற்றும் போராளிகள். பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

மாவீரர் கடேற் தூயவன் அவர்களின் திருவுருவப்படம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து அலங்கரிக்கப்பட்ட [illegible]ல் எடுத்து வரப்பட்டு திருவையாறு ம.வியில் ஏற்கனவே வைக்கப்பட்ட மாவீரர்களின் படங்களுடன் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சசி தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. கடேற் தூயவனுடைய திருவுருவப்படத்திற்கு பெற்றோர்கள் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து வீரவணக்க உரையினை கிளி. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முரளி. அரசியல்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் கந்தம் மான். தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர்.

11 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் அலங்கரிக்கப்பட்ட ஊர் [illegible] எடுத்து வரப்பட்டு கிளி. துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் கடேற் தூயவன் அவருடைய நினைவுக்கல் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது. செக்கண்ட் எஞ்சினியர் தணிகைமாறன்/தனேந்திரன் (துரைசிங்கம் கிருபன் இளவாலை யாழ்ப்பாணம் த.முகவரி றெட்பானா. விசுவமடு) என்பவரின் திருவுருவப்படம் நேற்றுக் காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் அஞ்சலிகள் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் இராணுவ மரியாதையுடன் பிரதான வீதி வழியாக விசுவமடு மாவீரர் மண்டபம் எடுத்துவரப்பட்டு அங்கு ஏற்கனவே அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் பத்து மாவீரர்களின் திருவுருவப்படங்களும் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தன அவற்றோடு இம்மாவீரனது திருவுருவப்படமும் வைக்கப்பட்டு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொழிலன் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

செக்கண்ட் எஞ்சினியர் தணிகைமாறன்/தனேந்திரன் என்பவருடைய திருவுருவப்படத்திற்கு அவருடைய சகோதரனும் போராளியுமாகிய திலீப் அவர்கள் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

நினைவுரையினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மோகன் நிகழ்த்தினார். தொடர்ந்து தணிகைமாறன்/தனேந்திரனது திருவுருவப்படம் மாவீரர் துயிலும் இல்லம் (விசுவமடு) எடுத்துச் செல்லப்பட்டு பூரண இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது.

(சோ.லோ.11.அ)

## பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மாணவர்களுக்குச் சீருடை விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

2003ஆம் ஆண்டிற்குரிய மாணவர்களுக்கான சீருடை விநியோகம் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. இவ்விநியோகம் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினூடாக விண்ணப்பித்த சகல மாணவர்களுக்கும் அன்றைய தினம் சீருடைப் பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளதால் பெற்றோர்கள் தவறாது அடையாள அட்டை. பங்கீட்டு அட்டை என்பனவற்றைக் கொண்டு வருமாறு பளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தா. சுவாமிநாதன் கேட்டுள்ளார். (அ)

## தொடர்புகொள்க

மீளக்குடியமரும் பிரதேசங்களில் வழங்கப்படும் கொடுப்பனவுக்கான பயனாளிகள் பட்டியல் முரசுமோட்டை. ஊரியான். கோரக்கன்கட்டு. பரந்தன். குமரபுரம். உமையாள்புரம் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும். கண்டாவளை பிரதேச செயலர் அலுவலகத்திலும் பொருத்தமான பொது இடங்களிலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்படும்.பயனாளிகள் தெரிவில் ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர் உடன் தம்முடன் அல்லது அரச அதிபருடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கண்டாவளை பிரதேசச்செயலர் பி.கா. மத்தியாஸ் அறிவிக்கின்றார். (14)

## பொதுக்கூட்டம்

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளதால் அனைத்துப் பெற்றோர்கள். நலன்விரும்பிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது.


**தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் கொம்பியூட்டர் எக்ஸ்பிறஸ் சஞ்சிகையும் கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியும் இணைந்து நடத்தும் கணனிக் கருத்தமர்வு**

காலம் : 22-03-2003, 23-03-2003 மு.ப. 10.00 மணி

இடம் : தொழில் நுட்பக் கல்லூரி.
கண்டி வீதி,
கிளிநொச்சி.

மேற்படி கருத்தமர்வில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன் பெறலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி.
கிளிநொச்சி.

(சி-8030)



**45ஆம் நாள் நினைவு நிகழ்வு**

**கப்டன்**
**பொதிகைத்தேவன்**
**(சிவஞானஸ்கந்தமூர்த்தி தயாபரன்)**

கடந்த 07.02.2003 அன்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் சதியால் வீரகாவியமான கப்டன் பொதிகைத்தேவனின் 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு நாளை (23.03.2003) அன்று ஆ. உதயகுமார், மாமூலை முள்ளியவளையில் உள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

ஆ.உதயகுமார்,
மாமூலை முள்ளியவளை.

தகவல்:
உறவுகள்.

(3038)

# அமெரிக்கப்படைகளின் தாக்குதல் தொடர்கிறது

# ஈராக் எல்லைப்பகுதி நகரம் கைப்பற்றப்பட்டது

## குவைத்தில் உள்ள அமெரிக்கப் படையதிகாரி தெரிவிப்பு

(பாக்தாத்)

**ஈராக் மீதான அமெரிக்கப் பிரிட்டிஷ் படையினரின் தாக்குதல்கள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.**

வளைகுடாக்கடலில்நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பல்களிலிருந்து குறூஸ் ஏவுகணைகளை ஈராக்கின் விமான நிலையங்கள் தொலைத்தொடர்பு நிலையங்கள் உள்ளிட்ட பல முக்கிய இடங்கள் மீது இத்தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. குண்டுவீச்சு விமானங்களும் தாக்குதல்களை நடத்திவருகின்றன. குவைத் தளத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் தாக்குதல் உலங்குவானூர்திகள் குவைத்-ஈராக் எல்லைப் பகுதிகளில் ஈராக்கிய நிலைகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திவருகின்றன. தரைப்படையினரும் குவைத்-ஈராக் எல்லைப் பகுதியூடாக பீரங்கிகள், மோட்டார்கள் சகிதம் தாக்குதல் நடத்தியவாறு நகருகின்றனர்.

ஈராக்கிற்கும் குவைத்துக்கும் இடையிலான எல்லைப்புறத்திலுள்ள நகரமொன்றை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் கைப்பற்றியுள்ளதாக குவைத்தின் உத்தியோகபூர்வ செய்தித்தாபனம் அமெரிக்கப் படை அதிகாரியை ஆதாரம்காட்டி அறிவித்துள்ளது.

அமெரிக்க, ஈராக்கியப் படைகளுக்கிடையே மோதல் இடம்பெறவில்லையென தெரிவித்துள்ள குவைத் செய்தி ஸ்தாபனம் ஈராக்கிய இராணுவத்தினர் 17 பேர் நேற்று முன்தினம் இரவு சரணடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஈராக்கின் தலைநகர் பாக்தாத் மீது இடம்பெற்ற தாக்குதலில் 4 ஈராக்கிய இராணுவத்தினர் பலியாகியுள்ளனர் எனவும் அமெரிக்கக் கப்பல்களிலிருந்தும் விமானங்களிலிருந்தும் 72 ஏவுகணைத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுளது.

பாக்தாத்தில் உள்ள சதாமின் வீட்டையும், சதாமின் மாளிகை மீதும் தாக்குதல் இடம்பெற்றதாக செய்திகள் தெரியவருகின்றன.

இதனிடையே ஈராக்கிய யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டங்கள் உலகின் பல நகரங்களில்இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் தங்கியுள்ள ஈராக்கிய மக்களை சமஷ்டிப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்

# ஐவரிக் கோஸ்ட் தீவிரவாதிகள் அமைச்சரவை கூட்டத்தைப் புறக்கணிப்பு

### -கூடுதல் அதிகாரம் வேண்டுமெனக் கோரிக்கை

(லண்டன்)

ஐவரிக் கோஸ்டில் அதிகாரப் பகிர்வு அடிப்படையில் உருவாக்கப்பட்ட புதிய அமைச்சரவை நேற்று முன்தினம் முதற்தடவையாகக் கூடியுள்ள போதிலும் அதில் பங்குபற்றுவதாக வாக்களித்த தீவிரவாதிகள் அங்கு சமுகமளிக்கவில்லை.

சனாதிபதி லோரன்ஸ் புதிய அமைச்சர்களின் பட்டியலை கூட்டம் ஆரம்பித்த போது வாசித்துள்ளார். தீவிரவாதிகளான 09 அமைச்சர்களும் சென்ற வாரம் நடைபெற்ற பூர்வாங்க கூட்டம் ஒன்றிலும் பங்கு பற்றவில்லை.

சனாதிபதியும் அவரது அதிகாரிகளும் அமைச்சரவைக் கூட்டத்தை விட்டு வெளியேறியவுடன் தீவிரவாதிகளின் தலைவரும் அவரது ஆதரவாளர்களும் அங்கு சென்றுள்ளனர். தங்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் எல்லைப் புறத்தில் இடம்பெறும் தாக்குதல்கள் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென பிரதம மந்திரிக்கும் தங்களுக்கும் மேலதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென தீவிரவாதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசாங்கத்தையும் தீவிரவாதிகளையும் இணைக்கும் வகையில் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தீவிரவாதிகள் சமுகம் அளிக்காது விட்டமை சமாதானத் திட்டத்தின் பின்னடைவைப் பிரதிபலிப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# நாற்பதாயிரம் கைதிகளை ருவாண்டா அரசு விடுதலை

(லண்டன்)


ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் உள்நாட்டுக் கலவரத்தின் போது கைது செய்யப்பட்டவர்களில் சுமார் 40 ஆயிரம் பேரை விடுவிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இங்கு கடந்த 1994 ஆம் ஆண்டு மிகப் பெரியளவில் உள்நாட்டுக் கலவரம் ஏற்பட்டது உலகையே அதிர வைத்த இச்சம்பவத்தில் சுமார் 80 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் உண்மையை ஏற்றுக் கொண்ட40 ஆயிரம் பேரை விடுவிக்க ருவாண்டா அரசு முடிவுசெய்துள்ளது. இந்தச் செய்தி வெளியான அதிர்ச்சியில் கைதிகள் 02 பேர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர். எனினும் கலவரத்தின் போது கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என அரசு அறிவித்துள்ளது.

அரசின் இந்த முடிவினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கும், தற்போது விடுவிக்கப் படவிருப்பவர்களுக்கும் இடையே மீண்டும் மோதல் ஏற்படக் கூடிய அச்சம் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் போர் முகங்கள்





1) கதியை அளக்கப்பயன்படும் கருவி எது?
கதிமானி (Speedometer)

2) விசையை அளக்கப்பயன்படும் கருவி எது?
நியூட்டன் விற்றராசு (Newton balance)

3) நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் போது நடைபெறும் சக்திமாற்றங்களைக்குறிப்பிடுக?
நீரின் அழுத்தசக்தி ⇨ நீரின் இயக்கசக்தி ⇨ சுழலியின் இயக்கப்பாட்டு சக்தி⇨ டைனமோவின் இயக்கப்பாட்டுசக்தி⇨ மின்சக்தி.

4) சைக்கிளோட்டி சைக்கிள் ஓடும் போது அதன் மின்விளக்கு ஒளிரும் போது நடைபெறும் சக்தி மாற்றங்களைக் குறிப்பிடுக?
உணவுகளிலிருந்து கிடைக்கும் சக்தி⇨இயக்கப்பாட்டு சக்தி ⇨ மின் சக்தி ⇨ ஒளிசக்தி.

5) சீனி உற்பத்திக்காக கரும்பு, பீற்றூட் பயன்படுத்தப்படுவது ஏன்?
இவற்றில் உணவு மாப்பொருளாக அன்றி சுக்குரோசாக சேமிக்கப்படுவதாலாகும்.

6) தங்குதனின் உருகுநிலை எத்தனைபாகை சென்ரிகிறேட்?
3380° C

7) பற்றீரியாக்களின் தொழிற்பாடு காரணமாக இறப்பர் பால் திரட்சியாவதைத் தடுக்க என்னென்ன இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுகிறது?
போமல்டி கைட்.
அமோனியா கரைசல்.
சோடியம் காபனேற்று,
சோடியம் சல்பைட்டு

8) பரம்பரை அலகுகளில் ஏற்படும் மாற்றம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
விகாரம்

9) ஐதரசன் பரவொக்சைட் ($H_2O_2$)ஏன் ஒளிஉட்புகாத கபிலநிறப் போத்தலில் மூடிவைக்கப்படுகிறது?
சூரியஒளி தாக்கப்படுவதால் பிரிகையடைந்து நீராக மாறிவிடும் என்பதால்

10) விசை என்றால் என்ன?
ஓய்விலிருக்கும் பொருள் ஒன்றின் ஓய்வை அல்லது சீரான வேகத்துடன் இயங்கும் பொருள் ஒன்றின் இயக்க நிலைமையை மாற்றும் காரணியாகும்.

11) மின்னோட்டம் என்றால் என்ன?
மின்னோட்டம் என்பது கடத்தியொன்றினூடாகப்பாயும் இலத்திரன் ஓட்டமாகும்.

12) அ) இரத்தத்தில் பொது வழங்கி எது?
O வகை

ஆ) பொதுவாங்கி எது?
AB வகை

13) ஒட்சிசன் வாயுவைக் கண்டுபிடித்தவர் யார்?
லவோசியர் (Lavoisier)

14) முதலாவது நுணுக்குக்காட்டியைக் கண்டுபிடித்தவர் யார்?
ஜன்சன் (Jansaen)

15) அ) மலேரியா நோய் நுளம்பினால்தான் உண்டாகிறது என்பதை முதன் முதலில் நிரூபித்துக்காட்டியவர் யார்?
சேர்றொனால்ட் றொஸ்

ஆ) இவர் எத்தனையாம் ஆண்டு இதை நிரூபித்துக்காட்டினார்.
1902 ஆம் ஆண்டு

16) பென்சிலினைக்கண்டுபிடித்தவர் யார்?
சேர். அலெக்சாண்டர் பிளெமிங் (ஸ்கொட்லாந்து)


17) அ) அயதுல்லா கொமெய்னி எந்த நாட்டின் அதிபராக இருந்தார்?
ஈரான்

ஆ) இவர் எந்த ஆண்டில் இறந்தார்?
1989இல்

18) 2002ஆம் ஆண்டு மன்செஸ்ரர் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டியில் ஆறு தங்கப்பதக்கங்களையும் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் வென்ற அவுஸ்திரேலிய ஆண் நீச்சல் வீரரின் பெயர் என்ன?
இடான் தோப்பே.

# டோஷோகு ஆலயம் (To Shogu Shrine)

ஜப்பானியரின் நுண்கலை, உலகின் மற்ற நாட்டு நுண்கலைகளிலிருந்தும் வேறுபட்டதாகும். குறிப்பாகக் கட்டடக்கலையைக் கொண்டே இந்த மாறுபாட்டை உணர முடியும். நவீன காலத்தில் ஓரளவு மாறுதல் ஏற்பட்டுள்ளது என்றாலும் புராதன கட்டடங்களை மாற்றாமல் பழம்பெருமையைக் காத்துவருகின்றனர் ஜப்பானியர்.



புராதன பெருமையுடன் மிடுக்காகக் காட்சியளிக்கும் அழகிய கட்டடங்களுள் லுஸாகா கோட்டை, கோல்டன் பெவிலியன் போன்ற கலைக்கோயில்கள் குறிப்பிடத்தக்கவை. அவற்றை ஜப்பானியக் கட்டடக்கலையின் பாரம்பரியத்திற்குச் சிறந்த உதாரணமாய்க் கூறலாம். இந்த அணியில் டோஷோகு ஆலயத்தையும் சேர்த்துக்கொள்ளலாம்.

டோஷோகு ஆலயம் உண்மையிலேயே ஓர் ஆலயமன்று. நினைவாலயம் எனக் கூறுவது பொருத்தமாயிருக்கும். ஏனென்றால், இது 17ஆவது நூற்றாண்டில் ஜப்பானை ஆண்டுவந்த டோகோவா இயாசு என்பவரின் ஆட்சியின் நினைவாகக் கட்டப்பெற்ற நினைவுச் சின்னமே யாகும். எனினும், இதற்குத் தெய்வத் தன்மையை வழங்க வேண்டுமெனக் கருதியே இதை டோஷோகு ஆலயம் எனப்பெயர் சூட்டினர்.

இதை உலகின் அரிய நினைவாலயமாக நிர்மாணிக்க விரும்பிய டோகோவா இயாசு, தமது நேரடிப் பார்வையில் கட்டு மானப் பணியை அக்கறை யுடன் கவனித்து வந்தார். கட்டு மானப் பணி 1634 ஆம் ஆண்டில் தொடங்கியது. இதைக் கட்டிமுடிப்பதற்கு 78,000 கட்டடக்கலைத் தச்சர்கள் தேவைப்பட்டனர். அன்றியும் கட்டுமானப் பணியாளர்கள், ஓவிய கலைநுட்ப நிபுணர்கள் என்று ஆயிரக்கணக்கிலே அமர்த்தப் பட்டனர்.

இந்த அரிய கட்டடம் ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவுக்கு வடமேற்கே 95மைல் (120 கி.மீ.) தொலைவில் அமைந்துள்ள நிக்கே தேசியப் பூங்காவில் நிர்மாணிக்கப் பெற்றுள்ளது. இந்தப் பூங்காவில் இருபதுக்கு மேற்பட்ட கலைக் கூடங்கள் அமைந்துள்ளன வெனினும், டோஷோகு ஆலயத் திற்கே தனிச்சிறப்பு உண்டு. சுற்றுலாப்பயணிகள் இங்கு திரளாகக் கூடுகின்றனர்.

# 2ஆம் உலக யுத்தத்தில் பங்கேற்ற எண்பத்தாறு வயது யானைமரணம்!

2ஆவது உலக யுத்தத்தின் போது ஜப்பான் இராணுவத்தினரின் பீரங்கிகளை துவம்சம் செய்த லின்வாங் என்ற ஆண் யானை இறந்து விட்டது. தைவானைச் சேர்ந்த ஆண்யானை லின்வாங். அது தைவான் குழந்தைகளால் லின் தாத்தா என்று செல்லமாக அழைக்கப்பட்டது. அது 2ஆம் உலக யுத்தத்தின் போது ஜப்பான் இராணுவத்தினரின் பீரங்கிகளை துவம்சம் செய்தது. பர்மா காடுகளில் புகுந்து ஜப்பான் படையினரை விரட்டி அடித்தது. 1943ஆம் ஆண்டு அந்த யானை சீன இராணுவத்தால் சிறைப் பிடிக்கப்பட்டது. அதன் பிறகும் அது தொடர்ந்து இராணுவ பணியாற்றி வந்தது. 1954ஆம் ஆண்டு அது மிருகக்காட்சிச் சாலைக்கு அனுப்பப் பட்டது. அதற்கு மாலான் என்ற பெண் யானை ஜோடியாகச் சேர்க்கப்பட்டது. தைவான் மக்கள் ஆண்டு தோறும் லின்வாங்கின் பிறந்த நாளை விருந்து வைத்து சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். கடந்த ஆண்டு லின்வாங்கின் பெண் துணை மாலான் இறந்து விட்டது. அதைத் தொடர்ந்து லின்வாங்கும் நோயில் படுத்தது. கடந்த சில வாரங்களாக உணவும் சாப்பிட முடியவில்லை. கடைசியாக தனது 86ஆவது வயதில் இறந்துவிட்டது. ஆசிய யானைகளிலேயே மிகவும் வயதான யானை அது எனக் கருதப்படுகிறது. லின்வாங்கின் உடலை பதப்படுத்திவைக்க 1,44,000 டொலர்கள் நிதி திரட்டுபடி தைப்பே மிருகக்காட்சிச்சாலை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# அதிக சத்தத்துடன் அழும் குழந்தைக்கு ஜப்பானில் பரிசு

ஜப்பான் நாட்டில் அம்மாக்கள் தங்கள் ஒரு வயதுப் பிள்ளைகளை அழுடா கண்ணா, அழகாக அழுது பரிசு வாங்குடா கண்ணா என்றுதான் கொஞ்சி வளர்க்கின் றார்கள்.

ஜப்பானில் எப்படி சுமோ மல் யுத்தம் பிரசித்தி பெற்றதோ அதே போல் பிள்ளைகளை அழவைக்கும் போட்டியும் அந்நாட்டில் பிரபலமாக இருக்கின்றது.

அம்மாக்கள் தமது ஒரு வயது பிள்ளைகளுக்கு சுமோ மல்யுத்த உடை அணிவித்து சுமோ சாம்பியன் கையில் அந்தப் பாலகனை கொடுப்பார்கள். சாம்பியன் கைக்கு போனதுமே பயத்தில் அந்தக் குழந்தை அழத் துவங்கி விடும்.


எந்தப் பிள்ளை அதிகமாகச் சத்த மிட்டு அழுகின்றதோ, அந்தக் குழந்தைக்கு சாம்பியன் பட்டம் கிடைக்கும்.

இப்படி அழவைத்தால் பிள்ளைகள் ஆரோக்கியமாக இருக்கும் என்பது ஜப்பானிய தாய்மாரின் நம்பிக்கை.

# முப்பரிமாணத்தில் இதயத்துடிப்பைக் கூட்டும் பிலிப்ஸ் - லைவ் - 3டி கருவி

ஈ.சி.ஜி. மருத்துவ கருவி தான் இப்போது இதயத் துடிப்பை காட்டும் கருவியாக உள்ளது. புதிதாக நவீன கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்துடன் இதயத் துடிப்பை ஸ்கேன்செய்யும் கருவி உருவாக்கப்பட்டிருக்கிறது. பிலிப்ஸ் - லைவ் - 3டி என்ற இந்தக் கருவி, இதயம் துடிப்பதை முப்பரிமாணத்தில் காட்டுகிறது. இலண்டன் கிங்ஸ் மருத்துவக் கல்லூரியில் இது பரிசோதிக் கப்பட்டது. முப்பரிமாணத்தில் இதயத்தைக் காட்டும் புதிய கருவி. இதய சிகிச்சை மருத்துவத்துக்கு பேருதவியாக அமைந்துள்ளது.

# மோதிர மணிக்கூடு



சிட்டிசன் நிறுவனம் மோதிர மணிக்கூட்டை தயாரித்துள்ளது.

இவற்றின் அகலம் ஒரு சென்ரி மீற்றருக்கும் குறைவு. உலகிலேயே மிகச் சிறிய சிறந்த குவாட்ஸ் கடிகாரம் அனேகமாக இதுதான் என்று கூறப்படுகின்றது.

# வேறுவிண்கலத்தை அனுப்பி கொலம்பியாவிலிருந்த 7 வீரர்களையும் மீட்டிருக்கலாமா?

கொலம்பியா விண்ஓடத்தில் இருந்த 7 விண்வெளி வீரர்களைக் காப்பாற்ற வேறுவழிகள் இருந்ததா? என்பது பற்றி நிபுணர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

கொலம்பியா விண்ஓடம் வெடித்ததில் இந்தியப் பெண் கல்பனா சாவ்லா உட்பட 7 விண்வெளி வீரர்கள் பலியானார்கள் அல்லவா? அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் நாசா ராக்கெட் வெடித்ததற்கு 3 காரணம் சொல்கிறது. ஜனவரி16 ஆம் திகதி விண்வெளிப் பயணம் கிளம்பும் முன், கொலம்பியா ராக்கெட்டின் இடதுபுற இறக்கையில் சிறிய சேதம் ஏற்பட்டு இருந்தது. இது விபத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

ராக்கெட் வெளிப்புற கட்டுமான சீர்குலைவால், வெப்பம் தாங்கும் ஓடுகள் வலுவிழந்து தீப்பிடித்து இருக்கலாம். அல்லது விண்ஓடம் அதன் கட்டுப்பாட்டை இழந்து வெடித்து இருக்கலாம் இப்படி மூன்று காரணங்களை வெளியிட்டுள்ளது. கொலம்பியா 1981-ம் ஆண்டு தயாரிக்கப்பட்டு இதுவரை 27 முறை பயன்படுத்தப்பட்ட பழைய விண் ஓடம் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவும் விபத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. கொலம்பியாவின் வெளிப்பகுதியில் கடும் வெப்பத்தைத் தாங்கக் கூடிய ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த ஓடுகள் சீர்குலைந்தால் அதன் விளைவாக விண்வெளி வெப்பம் நொடிப்பொழுதில் விண்ஓடத்தில் புகுந்து விண்ஓடத்தையும் அதன் உள்ளே இருப்பவர்களையும் பொசுக்கிவிடும். இந்த வெளிப்புற ஓடுகள் சேதமடைந்திருக்கிறதா? என்பதைக் கண்காணிக்க ரோபோ எந்திரக் கைகளைப் பயன்படுத்துவது வழக்கம். ரோபோ எந்திரக் கையில் கமராவைப் பொருத்தினால் அது விண்ஓடத்தின் வெளிப் பகுதியில் நீண்டு பாதிக்கப்பட்ட ஓடுகளைப் படம்பிடித்துக் காட்டியிருக்கும். அதை வானில் பறந்தபடியே சரிசெய்திருக்கலாம்.

ஆனால் கொலம்பியா விண் ஓடத்தில் உபரி ஓடுகள் இருக்கவில்லை. ரோபோ எந்திரக் கையுமில்லை. விண்வெளியில் பறக்கும் கொலம்பியா விண்கலத்தை பூமியில் இருந்து தெளிவாகப் பார்க்கக் கூடிய தொலைநோக்கிகள் இருக்கின்றன. இந்தவகைத் தொலைநோக்கிகளால் 290 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொருட்களைக் கூடப்பார்க்க முடியும். அந்தத் தொலைநோக்கியை அமெரிக்கத் தரைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் யாரும் பயன்படுத்தவில்லை.

அல்லது உளவு பார்க்கும் செயற்கைக் கோள்கள் மூலம் இந்த சேதத்தைப் பார்த்திருக்கலாம். 1998ஆம் ஆண்டு டிஸ்கவரி விண்ஓடத்தில் ஏற்பட்ட சிறிய சேதத்தை நாசா அமைப்பு செயற்கைக்கோள் மூலம் கண்டுபிடித்தது. கொலம்பியா விஷயத்தில் நாசா அதையும் செய்யவில்லை. விண்வெளியில் தற்போது சர்வதேச விண்வெளி நிலையமொன்று கட்டப்பட்டு வருகிறது. அங்கே ரஷ்ய,அமெரிக்க விண்வெளி வீரர்கள் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தகவல் தெரிவித்திருந்தால் அவர்களாவது விண்வெளி நிலைய கமரா மூலம் சேதத்தைக் கண்டு சொல்லியிருப்பார்கள். அதையும் அமெரிக்க நாசா விண்வெளி அமைப்பு அதிகாரிகள் செய்யவில்லை. நமக்கென்ன என்று சும்மா இருந்திருக்கிறார்கள்.

இதற்கிடையே கொலம்பியா விண்ஓடத்தில் பயணம் செய்த ஏழுபேரில் இருவரைத் தவிர ஏனையோருக்கு விண்ணில் நடக்கும் பயிற்சி தரப்படவில்லை. விண்ஓடத்தில் உபரி ஓடுகள் இருந்து விண்ணில் நடந்து வேலைபார்க்கும் பயிற்சியும் இருந்திருந்தால் கொலம்பியா விண்ஓடத்தையும் அதிலிருந்த வீரர்களையும் காப்பாற்றியிருக்கலாம். ஏழு விண்வெளி வீரர்களில் மைக்கேல் ஆண்டர்சன், டேவிற்பிரவுன் ஆகியோருக்கு விண்ணில் நடக்கத் தெரியும். ஆனால் இவர்களால் சிறிய அன்ரனா, றேடியோ கருவி போன்ற பொருட்களை மட்டுமே பொருத்தத் தெரியும். சிறிய பழுதுகளை மட்டுமே பார்க்கத் தெரியும். எனவே இந்த வழியும் சாத்தியப்பட்டிருக்காது. வானமண்டலத்தில் விண்கலத்தை விட்டு சும்மா வெளியே வந்து ரிப்பேர் பார்ப்பது சாதாரணமானது அல்ல. அது விஞ்ஞானிகளைத் தற்கொலை செய்யச் சொல்வதற்கு சமம் என்று நாசா கூறியிருக்கிறது. இதனிடையே கொலம்பியாவில் கோளாறு தெரிந்தவுடன் அதிலிருந்த வீரர்கள் ஏழுபேரையும் வானிலேயே வேறு விண்கலத்திற்கு மாற்றி காப்பாற்றியிருக்க முடியுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. விண்கல கட்டுப்பாட்டுப்பிரிவில் பணிபுரிந்த வல்லுநர் ஜேம்ஸ் ஓபெர்க் இதுபற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அர்ப கெடான் என்ற முறைப்படி விண்கலங்களுக்கிடையே ஆட்களை மாற்றும் திட்டத்திற்கு இவர் முன்னோடியாவார். அவர் கூறியதாவது; இந்தத் திட்டம் சாத்தியம் என்று சொல்லமுடியாது. ஆனால் கொஞ்சம் வாய்ப்பு உண்டு. அற்புதங்களுக்கு எப்போதும் வாய்ப்பு உண்டு. கொலம்பியா விண்ஓடத்தில் இன்னும் சில நாட்களுக்கு போதுமான எரிபொருள் இருந்தது எனவே சேதம் இருப்பதைத் தெரிந்துகொண்டு அதை பூமிக்குத் திரும்ப அனுமதிக்காமல் இன்னும் சில நாள் விண்வெளியில் உலாவவிட்டிருக்கலாம். இந்த எழு வீரர்களும் முதுகில் மாட்டிப் பறக்கக் கூடிய ஜெற் கருவியை மாட்டிக்கொண்டு சர்வதேச விண்வெளி நிலையத்திற்குப் போய்த்தப்புவது ஒருவகையில் சாத்தியம் தான்.

ஆனால் இந்த ஜெற் கருவிகள் எதுவும் கொலம்பியாவில் இல்லை. இது தவிர கொலம்பியாவும், சர்வதேச விண்வெளி நிலையமும் வேறுவேறு வட்டப்பாதை களில் சுற்றுபவை. கடந்த இரண்டு வாரங்களில் பலமுறை இவை இரண்டும் சந்தித்துக் கொண்டன. இருந்தும் கூட இரண்டுக்கும் இடைப்பட்ட தூரம் அதிகம் என்பதால் இந்தவழி சாத்தியப்படாது. இதுதவிர விண்வெளி நிலையத்துடன் இணையும் வசதியும் கொலம் பியாவில் இல்லை. இந்தநிலையில் வேறு விண்ஓடம் ஒன்றை அனுப்பி ஏழுபேரையும் மீட்டிருக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. அமெரிக்காவிடம் விபத்தில் சிக்கிய கொலம்பியா தவிர டிஸ்கவரி, அட்லாண் டிஸ்,எண்டவர் உட்பட மேலும் மூன்று விண்ஓடங்கள் உள்ளன. (சாலைஞ்சர் ஓடம் ஏற்கனவே அழிந்து விட்டது.)இந்த மூன்று ஓடங்களில் ஏதாவது ஒன்றை அல்லது ரஷ்யாவின் சோயூஸ் விண்ஓடத்தை அனுப்பி வீரர்களை மீட்க முயற்சித்திருக்கலாம். ஆனால் விண்ஓடம் ஒன்றைப் பயணத்திற்குத் தயார்செய்ய சாதாரணமாக நாலுமாதமாகும். மிகத் துரிதமாகச் செயற்பட்டால் கூட விண்ஓடத்தை தயார் செய்ய ஒருவாரமாகிவிடும். இந்தநிலையில், மிகவும் துரிதமாக ஒரு விண்ஓடத்தைத் தயார்ப்படுத்தி அதில் இரண்டு வீரர்களை அனுப்பியிருந்தால் கொலம்பியாவில் உள்ள ஏழு வீரர்களை மீட்டு அதில் அழைத்து வந்திருக்க முடியும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

விண்ஓடத்தில் சிக்கிய வீரர்களைக் காப்பாற்றமுடியாத நிலையில் அவர்களைப் பூமிக்குத் திரும்பச் சொல்லாமல் அப்படியே எல்லையில்லா விண்வெளியில் பறக்க விட்டிருக்க முடியும்.அப்படிச் செய்திருந்தால் அவர்கள் கருகிச் சாகாமல் நிம்மதியாகப் பல நாட்கள் பறந்தபின்பு இறந்திருப்பார்கள். கொலம்பியா விண்ஓடம் அவர்களுக்குப் பறக்கும் கல்லறையாக மாறியிருக்கும். அதையும் கூட நாசா அதிகாரிகள் செய்யத் தவறிவிட்டார்கள் என்றார்.

அமெரிக்க வீராங்கனை அனுப்பிய கடைசி ஈ-மெயில் செய்தி கிடைத்துள்ளது. கொலம்பியா விண்ஓடம் வெடித்துச் சிதறியதில் இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லாவுடன் அமெரிக்க வீராங்கனை ஒருவரும் பலியானார் அல்லவா? அவரது பெயர் லாரல் கிளார்க். இவருக்கு எட்டு வயதில் குழந்தை இருக்கிறது 1996ம் ஆண்டு நாசாவில் வேலைக்குச் சேர்வதற்கு முன் லாரல்கிளார்க் கடற்படை நீர்மூழ்கிக் கப்பலில் டாக்டராகப் பணி யாற்றியவர். ஆழ்கடலுக்குள் பலமுறை சென்று வெற்றிகரமாகத் திரும்பிவந்த அவர், விண்வெளியில் முதன்முறை பயணம்செய்து தனது வாழ்வை முடித்துக் கொண்டிருக்கிறார். இந்த லாரல்கிளார்க் இறப்பதற்கு ஒருநாள் முன்பு கொலம்பியா விண்ஓடத்தில் இருந்து தனது குடும்பத்திற்கு ஒரு ஈ-மெயில் அனுப்பியிருக்கிறார். அந்தச் செய்தியில் அவர் கூறியிருந்ததாவது ஹலோ.பிரமாண்டமான பூமிக்கிரகத்திற்கு மேலே பறந்தபடி இந்தச் செய்தியை அனுப்புகிறேன். உலகம் அற்புதமாக இருக்கிறது. இங்கே நாள்முழுவதும் 24 மணி நேரமும் விஞ்ஞானப் பரிசோதனைகளைச் செய்து வருகிறோம். இடைவெளியில் கிடைத்த கொஞ்ச நேரத்தைப் பயன்படுத்தி இந்தச்சிறிய ஈ-மெயிலை அனுப்புகிறேன். என்னை நேசிக்கும் பலருக்கு இந்தச் செய்தியைப் பகிர்ந்து அளியுங்கள். இங்கிருந்து பார்க்கும் போது பசுபிக் கடலில் மின்னல் வெட்டுவது தெரிகிறது. அவுஸ்ரேலியா அடிவானம் அதன் நகரங்களின் ஒளிவெள்ளம் போன்றவை தெரிகிறது. பிறைநிலா பூமியின் மடியில் மறைவது தெரிகிறது. ஆபிரிக்காவின் சமவெளிகள் தெரிகிறது. மலைகள், ஆறுகள், ஜப்பானின் பியூஜி எரிமலை போன்றவை கண்ணில் படுகின்றன. முதல் நாள் எங்கள் விண்கலம் அமெரிக்காவின் மிச்சிகன் நகரின் மீது பறந்தது. ஒவ்வொருநாளும் பூமியின் ஒவ்வொரு வித்தியாசமான பகுதிகளை நான் பார்க்கின்றேன். நட்சத்திரங்கள்கூட பூமியில் தெரிவதை விட இங்கே பிரகாசமாக மின்னுகின்றன. இவ்வாறு அந்த ஈ-மெயில் செய்தியில் அவர் கூறியிருந்தார். □

# ஆண்களை அதிகமாகத் தாக்கும் இதய நோய்

மனிதனுக்கு வரும் நோய்களில் சரிபாதி இதயம் சம்பந்தப்பட்ட நோய்களாகவே இருக்கின்றது. அதிலும் பெரும்பாலும் ஆண்களையே தாக்கும் இந்த நோய் ஆசியாவில் மட்டும் அதிகளவில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

பிறவியிலேயே இதயநோய் ஏற்படுவது மிகக் குறைவு என்றாலும், பெரும்பாலும் நாமாகவே வரவழைத்துக் கொள்கின்றோம் என்பதே அதிகம்.

நமது உணவுமுறை, தீய பழக்க வழக்கங்கள் இந்நோய்க்கு வழிவகுக்கின்றன. அதிலும் கூடிய பாகம் மேல்நாட்டு வர்க்கத்தினரே இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

நிறைய சாப்பிட்டுவிட்டு தேகத்திற்கு வேலை கொடுக்காத போது உடல் பெருத்து, செலவிடப்படாத சக்தி கொழுப்புப் பொருளாய் மாறி விடுகின்றது. இரத்தத்தில் அப்படியே தங்கி விடுகின்றது.

இவ்வாறு நிறையச் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கு இருதய நோய் மட்டுமன்றி, சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு போன்ற வியாதிகளும் வரவாய்ப்பிருக்கின்றது. உடல் எடையில் 10கிலோ கூடினால், அதில் 200மில்லி கிராம் கொழுப்பு கூடிவிடுகின்றது.

இரத்த அழுத்தம் அதிகரிக்கும் போதும், அதன் நேரடிப் பாதிப்பு இருதயத்தின் இடது வென்டரிகின் (சுத்த இரத்தத்தை இதயத்திற்கு பம்ப் செய்யும் அறை) பகுதியைப் பாதிக்கின்றது. இதயத் தசைகளுக்கு வேண்டிய சீரான இரத்த ஓட்டம் தடைப்பட்டு மாரடைப்பு ஏற்படுகின்றது.

அதிக அளவில் உப்பு மற்றும் கொழுப்பு வகை உணவுகள் உட்கொள்ளுதல். குறைவான விகிதத்தில் கல்சியம், பொட்டாசியம் உட்கொள்ளுதல் போன்றவை இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்துகின்றன.

புகைப்பிடித்தல் இதயத்தை நேரடியாகத் தாக்குகின்றது. புகையை உள்ளே இழுக்கும் போது, அதில் உள்ள நிகோடின் மற்றும் கார்பன் மொனோக்சைட் இதயக் குழாய்களுக்குக் கேடு விளைவிக்கின்றன.

நிகோடின், இதயத்தை அதிகமாகத் துடிக்க வைக்கும் போது, இதயத்திற்கு அதிக பிராணவாயு தேவைப்படுகின்றது. அப்பொழுது கார்பன் மொனோக்சைட், இரத்த செல்கள் கொண்டு செல்லும் பிராணவாயுவைத் தடை செய்கின்றது.

அது மட்டுமன்றி புகைப்பிடித்தல் இரத்தத்தை திரவ நிலையிலிருந்து மாற்றி திண்ம நிலைக்கு இறுக வைத்து விடுகின்றது.

சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு சிறுநீரிலும், இரத்தத்திலும் அதிகமாய் சர்க்கரை கலந்திருக்கும். எந்த அளவுக்கு சர்க்கரை தேவையோ அதை மட்டும் கல்லீரல் உடலுக்கு அனுப்பிவிட்டு மீதியைக் கொழுப்புக் கலவையாக விட்டு விடுகின்றது.

இது பின்னர் இரத்தக் குழாய்களுக்குச் சென்று அடைப்பை ஏற்படுத்துகின்றது. இதனை அதிரோஸ்கெலிரோசிஸ் (Athero scelerosis) எனப்படுகின்றது.

கொழுப்பில் கூட நல்ல கொழுப்பு, கெட்ட கொழுப்பு என இருவகையான அடையாளங்கள் காணப்படுகின்றன.

குறைந்த அடர்த்தி கொண்ட கொழுப்புப் புரதம் (LDL) இரத்தக் குழாயில் அரிப்பை உண்டாக்கி கொழுப்பை அங்கேயும் தங்கவைத்து விடுவதால் அதனைக் கெட்ட கொழுப்பு என்றும், இரத்தக் குழாயில் படிந்துள்ள கொழுப்புக் கலவையை அப்படியே கூட்டிச் சென்று கல்லீரலுக்குக் கொண்டு செல்வதால் அதிக அடர்த்தி கொண்ட கொழுப்புப் புரதத்தை (HDL) நல்ல கொழுப்பு என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

பெரும்பாலும் தொழில் அதிபர்களே அல்லது உயர் அதிகாரிகளே இந்நோய்க்கு ஆளாகின்றனர். இவர்களுக்குப் பல பிரச்சினைகள் காரணமாக மன அழுத்தம் ஏற்படும் போது அட்ரினாலின் சுரப்பிகள் அதிகமாய் வேலை செய்ய இரத்த ஓட்டம் துரிதமாகின்றது.

இரத்தத்தில் ஓடும் ஹார்மோன்கள் இரத்தக் குழாயின் சுவர்களைக் காயப்படுத்தி கொழுப்புப் பொருளை அங்கேயே தங்க வைத்து விடுகின்றது. இதனால் திடீர் மாரடைப்பு ஏற்படுகின்றது. இதில் இன்னொரு விடயமும் உண்டு. அதீத மன அழுத்தத்தின் காரணமாக அதிலிருந்து விடுபட அல்லது விடை தேட புகைப்பிடிப்பதும், மது குடிப்பதும் போன்ற பழக்கங்களில் சிலர் முனைகின்றார்கள்.

இது இன்னமும் மோசமானநிலைக்குக் கொண்டு செல்கின்றது.

மொத்தத்தில் இருதயத்தின் 90% பராமரிப்பும் பாதுகாப்பும் நம்மிடத்தில்தான் இருக்கின்றது.

அதனால், அன்றாடம் எமது மொத்த உணவில் 15.25%க்கும் குறைவாக கொழுப்புச் சத்து உணவு எடுத்துக் கொள்வது நலம். உப்பைக் குறைவாய் உபயோகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

நார்ச்சத்து உள்ள காய்கறிகளை நாளுக்கு 40 கிராமாவது உணவில் சேர்க்க வேண்டும். □

# பொலிசாரின் நடவடிக்கையால் தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாம்

*–சனாதிபதி சந்திரிகா அமரதுங்கவுக்கு கடிதம்*



**பொலிசாரின் நடவடிக்கைகளால் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வைத்துக் கொண்டு தமது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இரகசியப் பொலிசார் தொந்தரவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று வருடங்களுக்கு முன் பிளாஸ்ரிக் கதிரைகளை களவாடியதாகக் கூறி மூன்று அதிகாரிகளைக் கைது செய்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியிருப்பதோடு, தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் தமது பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தொந்தரவு கொடுக்க நடவடிக்கைகளை பொலிஸ் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளதா? எனவும் சனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

# அரசிற்கெதிராக அரச ஊழியர் 26 இல் போராட்டம் நடத்த முடிவு

அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துகின்ற அரசாங்கத்தின் செயற்பாட்டைக் கண்டித்தும், அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கக்கோரியும் தெற்கில் அரசாங்க ஊழியர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வளங்களையும் மனித உரிமைகளையும் பாதுகாக்கும் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் அரசாங்க வங்கிக் கிளையைச் சேர்ந்த ஊழியர்களும், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை, புகையிரத போக்குவரத்துச்சபை மற்றும் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களும் இணையவுள்ளதாக மேற்படி சங்கத்தின் ஒழுங்கமைப்பாளர் சிவிண்டஸ் லியனகே தெரிவித்துள்ளார்.

# மீசாலை படைமுகாம் பலப்படுத்தப்படுகிறது

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மீசாலைச் சந்தியை அண்மித்த பகுதியிலுள்ள படைமுகாம் பலப்படுத்தப்பட்டு வருவது குறித்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இப்படைமுகாம் முன்பு எதுவித பாதுகாப்பு வேலிகளுமின்றி இருந்தது. ஆனால், இப்போதோ தமது முகாமைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர். படையினர் படைமுகாங்களைப் பலப்படுத்தி வருவது மக்கள் மத்தியில் பெரும் அச்ச உணர்வினை ஏற்படுத்தி வருகின்றது.

# நத்தார் பண்டிகைக்கு முன்னர் ஆட்சியைக் கைப்பற்றுவோம்

*– அநுரா பண்டாரநாயக்க புலம்பல்*

(கொழும்பு)

இவ்வருடம் நத்தார் பண்டிகைக்கு முன்னர் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சனாதிபதியின் ஆலோசகருமான அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டில் தேர்தல் ஒன்று வரும் போது சனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அவ்வேளையில் முக்கியமான அமைச்சுக்களான பாதுகாப்பு அமைச்சையும் ஊடகத்துறை அமைச்சையும் பொறுப்பேற்பார் என்றும் அவர் கூறியுள்ளார்.

# டிப்ளோமா பரீட்சை இம்மாதம் 29,30 இல் நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)

தேசியக் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பகுதி-II பரீட்சை இம் மாதம் 29ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறுமென சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கல்வி வளநிலையத்தில் கல்வி டிப்ளோமா பயின்ற ஆசிரிய மாணவர்களுக்கான, பரீட்சை கிளிநொச்சியில் நடைபெறுமெனவும் அவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டைகள் கிடைக்காவிடின் பரீட்சைக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(பா)

# ஈராக்கிற்கு எதிரான போருக்கு அமெரிக்கா மீது கண்டனம்!

*– ஆக்கிரமிப்பிற்கு எதிரான அமைப்பு கொழும்பில் ஆவேசம்*

(கொழும்பு)

ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான சிறிலங்கா அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் அமெரிக்காவின் ஏகாதிபத்திய மனநிலையைக் காணக்கூடியதாக இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொ.ஐ. முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, இலங்கை சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் தொழிற்சங்கங்கள் பல இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான கூட்டமைப்பு நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியபோதே இக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். - கண்டி வீதியில் இரு விபத்துக்களில் 2 பேர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ். கண்டி வீதியில் நேற்று இடம்பெற்ற இரு வீதி விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளி. தனியார் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பெற்றனர்.

நேற்று முன்தினம் காலை டிப்போச் சந்திக்கருகாமையில் ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிப மாது ஒருவர் படுகாய மடைந்த நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி முன்னைய மாவட்ட வைத்திய சாலைக்கருகாமையில் மோட்டார் சைக்கிள் ஒன்று துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த கோணாவிலைச் சேர்ந்த வே. சுப்பிரமணியம் (வயது-53) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளி. மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியில் நடைபெற்ற மூன்று வீதி விபத்துக்களில் ஒருவர் பரிதாப மரணத்தை தழுவியதும், மூவர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதும் தெரிந்ததே.

(கோ)

# சேவையைச் சீராக நடத்த முடியவில்லை மக்கள் மயப்படுத்தப்பட்ட போ.சேவை நெருக்கடியில்

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் இயங்கும் பஸ் டிப்போக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ் சேவையை முறையாக நடத்துவதற்கும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் தேவையான நிதியில்லாமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பல பஸ் டிப்போக்கள் தமது ஊழியர்களுக்கான மாதச்சம்பளத்தை வழங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்த நிலையில் கண்டி தெற்கு பஸ் டிப்போ ஊழியர்கள் அண்மையில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

# யாழ்.பல்கலையின் புதிய துணைவேந்தர் பேரா.மோகனதாஸ் பதவியினைப் பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் மோகனதாஸ் கடந்த புதன்கிழமை தனது பதவியினைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை காலை எட்டு மணியளவில் யாழ். பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளில் புதிய துணைவேந்தர் முதலில் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சேர். பொன் இராமநாதனின் உருவச்சிலைக்கு அவர் மலர் மாலை அணிவித்தார்.

பின்னர் துணைவேந்தர் அலுவலகத்திற்குச் சென்று புதிய துணைவேந்தரை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை கைலாகு கொடுத்து வரவேற்றார்.

புதிய துணைவேந்தரின் சம்பிரதாய பூர்வ பதவியேற்பை அடுத்து பல்கலைக்கழகச் சமூகத்தினர் புதிய துணைவேந்தருக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

# மின்னல் தாக்கி யுவதி பலி; மற்றொரு பெண் காயம்!

(அலுவலக செய்தியாளர்)

இடிமின்னல் தாக்கியதில் இளம் யுவதி ஒருவர் உடல் கருகி மரணமானார்.

மேற்படி சம்பவம் முரசுமோட்டைப் பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிளி. 6ஆம் வாய்க்காலைச் சேர்ந்த சித்திரா (வயது -17) என்பவரே மின்னல் தாக்கியதில் உடல் கருகி பரிதாபகரமாக மரணமானவராவார். இவருடன் அருகில் நின்ற முரசுமோட்டையைச் சேர்ந்த செல்வராணி (வயது 29) என்ற இளம் குடும்பப் பெண் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் தற்போது சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிய வந்துள்ளது.

(கோ)

# 743 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் தென்னை அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து 743 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளனர்.

இதில் பன்னங்கண்டியில் 232 குடும்பங்களுக்கு இரண்டு வீதப்படி 464 தென்னங்கன்றுகளும் சம்புக்குளத்தில் 154 குடும்பங்களுக்கு 308 தென்னங்கன்றுகளும், முழங்காவில் பல்லவராயன்கட்டு கிராமத்தில் 121 குடும்பங்களுக்கு 363 தென்னங்கன்றுகளும், ஜெயபுரம் வடக்கு கிராமத்தில் 130 குடும்பங்களுக்கு 260 தென்னங்கன்றுகளையும், கண்டாவளைப் பிரதேச தருமபுரம் மேற்கு கிராமத்தில் 100 குடும்பங்களுக்கு 200 தென்னங்கன்றுகளையும், ஜெயபுரம் வடக்கு பகுதியைச் சேர்ந்த ஆறு மாவீரர் குடும்பங்களுக்கு 30 தென்னங்கன்றுகளையும் அண்மையில், அந்தந்த பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

(அ)

**சிந்தனைக்கு**

இன்றைய உலக ஒழுங்கை பலம் தான் நிர்ணயிக்கிறது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-03-2003

## உலகம் இரு கூறாக......!

பாரசீக வளைகுடாவில் போர் தொடங்கிவிட்டது. இப் போரானது, ஏற்கனவே எதிர்படிர்க்கப்பட்டதொன்றே ஆயினும், இன்றோ நாளையோ என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் காலையில் இருந்து ஆரம்பமாகியுள்ளது.

அமெரிக்கா தனது ஒரு பகுதி நேச அணியினரின் ஆதரவுடன் ஈராக்கிற்கு எதிரான இப்போரைத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவின் ஒருபகுதி நேச அணியினர் இப்போரை எதிர்ப்பதோடு - உலகில் பல பெரிய நாடுகளும் இப்போருக்கு தமது ஆதரவை வழங்காததோடு கண்டிக்கவும் செய்துள்ளன. இந்நிலையில் இப்போரானது அமெரிக்காவின் தனிப்பட்ட தீர்மானத்தின்பாற்பட்ட போர் என்று கூடக் கூறலாம்.

இதேவேளை, இப்போருக்கு முக்கியமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ள நாடுகளில் அமெரிக்கா - பிரிட்டன் ஆகியவற்றின் நட்பு நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி என்பன குறிப்பிடத் தக்கவையாகும். ஏனெனில் இந்நாடுகள், குறிப்பாக பிரான்ஸ் ஐ.நா. சபையில் 'வீட்டோ' அதிகாரத்தை - ரத்து அதிகாரத்தை - கொண்டது என்பது ஒருபுறம் இருக்க 'நேட்டோ' அணியின் முக்கி நாடுகளில் ஒன்றுமாகும்.

ஈராக் மீதான தாக்குலுக்கு அமெரிக்கா கூறும் காரணமானது ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை பதவியில் இருந்து நீக்குவதும், ஈராக்கில் உள்ள பேரழிவுகளைத் தரக்கூடிய உயிர் கொல்லி ஆயுதங்களை இரசாயன, உயிரியல்-ஆயுதங்களை அழித்தலும் என்பதாகவும் உள்ளது. ஆனால் ஈராக்கோ தன்னிடம் இருந்த இத்தகைய ஆயுதங்களை ஏற்கனவே அதாவது தொண்ணூறுகளின் ஆரம்பத்திலேயே அழித்து விட்டதாகக் கூறுகின்றது.

இதேவேளை, இப்போருக்கான கவனம் வளைகுடாவில் குறிப்பாக ஈராக்கில் உள்ள பெற்றோலிய எண்ணெய் வளத்தினைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சி எனக் குற்றம் சாட்டப்படுகின்றது. ஆனால், யுத்தத்திற்கான காரணம் என்ன? யுத்தம் ஒன்று தொடங்கப்பட்டது சரியா? பிழையா? என்பவையெல்லாம் ஒருபுறம் இருக்க - இவ் யுத்தத்தினால் விளையப்போகும் பாதிப்பு என்னவாக இருக்கும் என்பதே இன்று பலரது கேள்வியாகும்.

ஏனெனில், இப்போர் மூளாது இருக்க அன்றித் தடுக்க மேற்கொள்ளப்பட்ட பல இராஜதந்திர நடவடிக்கைகளும் தோல்வியுற்றுப்போன நிலையிலேயே இப்போர் மூண்டுள்ளது. இந்நிலையில் இப்போரின் விளைவானது, ஒரு பெரிய மனித அவலத்திற்கு வித்திடும் என்பது ஒருபுறம் இருக்க - சர்வதேச ரீதியில் இப்போரை ஆதரித்த சக்திகளுக்கும், எதிரான சக்திகளுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவும் பிரிட்டனும் இப்போரை ஆரம்பிப்பதற்கு மேற்கொண்ட அனைத்து இராஜதந்திர முயற்சிகளும் தோல்வி அடைவதற்கு, பிரான்ஸ் போருக்கு எதிராக எடுத்துள்ள நிலைப்பாடே காரணம் என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. இதேவேளை, பிரான்ஸ் அரசோ பெரும்பாலான உலக நாடுகளின் அபிப்பிராயத்திற்கு அமெரிக்கா செவிசாய்க்கவில்லை எனத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஐ.நா. சபை ஊடாகப் போரைத் தொடங்கவும் போரைத் தடுக்கவும் மேற்கொண்ட இரண்டு முயற்சிகளுமே தோல்விகண்டுள்ளன.

எது எவ்வாறாயினும், இன்று போர் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதில் அமெரிக்கா எதிர்பார்ப்பது போல் வெற்றி பெற்றாலும் சரி, ஈராக் சதாம் ஹுசைன் கூறுவது போல் அமெரிக்க அதிபர் தோல்வி அடைந்தாலும் சரி, எது நிகழ்ந்தாலும் இப்போரானது தற்போது மட்டுமல்ல, நீண்டகாலத்திற்கு உலகில் பல நிகழ்வுகளுக்கும், விளைவுகளுக்கும் காரணமாகும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக இப்போரின் பின்னர் முதலில் தோல்விக்குரியதாகப் போவது ஐ.நா.வின் எதிர்காலமே ஆகும். ஏனெனில், ஐ.நா.வின் அங்கீகாரம் இன்றி அமெரிக்கா போர் தொடுத்துள்ளமையினால், இனி ஐ.நா.வால் உலக விவகாரங்களைக் கையாளமுடியுமா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே. ஆகையினால், ஐ.நா. உடைந்து போவதோ அன்றிச் செயலிழந்து போவதோ தவிர்க்க இயலாது போகக்கூடும். ஏனெனில், ஐ.நா.வில் 'வீட்டோ' அதிகாரத்தைக் கொண்டுள்ள நாடுகளில் மூன்று நாடுகள் இவ்யுத்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. ஆனால், அமெரிக்கா யுத்தத்தைப் பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் இன்றித் தொடர்ந்ததால் பாதுகாப்புச் சபையும், 'வீட்டோ' அதிகாரங்களும் அர்த்தமற்றவையாகியுள்ளன.

அத்தோடு, 'நேட்டோ' அமைப்பின் எதிர்காலம் கூடக் கேள்விக்குரிய தொன்றாகவே மாறக்கூடும். ஏனெனில், நேட்டோவின் முக்கிய பங்காளியான அமெரிக்கா -- பிரிட்டன் ஆகியவற்றின் நிலைப்பாட்டிற்கு மாறான நிலைப்பாட்டை பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மற்றைய பங்காளிகள் மேற்கொண்டமையானது. இம்முரண்பாட்டிற்குக் காரணமாக அமையக்கூடும்.

இந்த வகையில் ஈராக் மீதான போர் சர்வதேச அரசுகளை யுத்தத்திற்கு ஆதரவானவர்கள், எதிரானவர்கள் என்ற இரு தரப்பாக்கியுள்ளது. இது முதலாம் உலக மகாயுத்தத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச சங்கம் உடைந்த போது, உலகை இரு கூறாக்கியது போன்று தீவிரம் மிக்கதாக இல்லாதுவிடினும், ஐ.நா. சபையைப் பலவீனப்படுத்தியுள்ளது என்பது நிராகரிக்க முடியாத தொன்றாகி யுள்ளது. அடுத்ததாக இப்போரானது உலகை இரு கூறாக்கி யுள்ளமையானது உலகை மீண்டும் ஒரு கெடுபிடிப்போருக்கு இட்டுச் செல்லுமா என்ற கேள்வியைக் பலமாகவே எழவைத்துள்ளது. இதனை ஈராக் போரின் பின்னான விளைவும், ஐ.நா. சந்திக்கவுள்ள நெருக்கடிகளுமே தீர்மானிக்கும்.

# ஜப்பான் இராஜதந்திரிகள் - புலிகள் சந்திப்பு;
# ஜப்பானிய பங்களிப்பை அதிகரிக்கக் கோரிக்கை!

(டோக்கியோ)

ஜப்பானில் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான குழுவினருக்கும், ஜப்பானிய வெளியுறவுத்துறை இராஜதந்திரிகள் குழுவினருக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி மூன்றாவது நாளான நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

விடுதலைப்புலிகள் குழுவினருக்கு மதியபோசன விருந்தளித்து ஆரம்பிக்கப்பட்ட இச்சந்திப்பில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜப்பானியப் பிரதிநிதிகளை நல்ல முறையில் உபசரித்ததற்கு ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி புலிகளுக்கு நன்றியைத் தெரிவித்தார். தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியடையவேண்டுமென்று வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

இதனையடுத்து ஜப்பானில் புலிகள் குழுவினரை நல்லமுறையில் உபசரித்ததற்கு புலிகளின் குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்ற அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், ஜப்பானிய இராஜதந்திரிகளுக்கு நன்றியைத் தெரிவித்ததோடு சர்வதேச அந்தஸ்துடன் நடைபெறும் இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஜப்பானின் சுறுசுறுப்பான பங்களிப்பை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இச்சந்திப்பில் புலிகள் தரப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா,திருமதி அடேல் பாலசிங்கம்,பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன்,புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உள்ளிட்ட பத்துப்பேரும்,

ஜப்பானிய தரப்பில் ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி (தலைமை) சிறிலங்காவிற்கான ஜப்பானிய தூதுவர் சிக்ரோ ஒட்சுகாவுடன் ஜப்பானிய வெளியுறவுத்துறை அமைச்சைச் சேர்ந்த மேலும் மூன்று இராஜதந்திரிகளும் கலந்துகொண்டனர்.

# தயாரட்ண,ராஜித சேனாரட்ண-சிறி.மு.கா பரஸ்பரம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இரு அமைச்சர்களுக்கெதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் நேரில் சந்தித்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான அன்வர் இஸ்மாயில்,எச்.எம்.எம் பாரிஸ்,நிசாத் பதுருதீன் ஆகியோரே பிரதமரைச் சந்தித்து முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர். அண்மையில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த இரு அமைச்சர்கள் அங்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குறித்து கூறியிருந்த கருத்துக்கள் பற்றியே முறையிட்டுள்ளனர்.

இதுபற்றி ஆராய்வதற்கான சிறி.மு.காங்கிரஸ் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும்,இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல் விடுத்து மிரட்டுவதாக இரு அமைச்சர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இந்த இரண்டு கட்சிகளும், அரசாங்கத்தை மிரட்டிவருவதாக அம்பாறையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர்கள் தயாரட்ணவும்,ராஜிதசேனாரட்ணவும் குற்றம்சாட்டியுள்ளனர்.

அத்துடன் வால் தலையைக் கட்டுப்படுத்துவது போல முஸ்லிம் காங்கிரஸ் நடந்துகொள்ள முற்பட்டால் வாலைவெட்டிவிடுவோம் என்றும் இவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

அத்துடன், கிழக்கில் ஐ.தே. கட்சிக்கு முஸ்லிம் காங்கிரஸ் மூலம் தான் ஆதரவு கிடைத்தது போன்று கருதிக்கொண்டு இருப்பதாகவும் ஆனால் உண்மை அதுவல்ல என்றும் அமைச்சர்கள் தயாரட்ணவும், ராஜிதசேனாரட்ணவும் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தில் இணைந்துள்ள கட்சிகளை ஐ.தே.கட்சி அமைச்சர்கள் நேரடியாக விமர்சனம் செய்திருப்பது இதுவே முதற் தடவை என்பதும் குறிப்பிடத் தக்கது.

### - இல. ஆசிரியர் சேவை -
# வகுப்பு ஒன்றிற்கு உள்வாங்கும் வயதுக்கட்டுப்பாட்டை நீக்குக!

*– ஆசிரியர் உரிமை காக்கும் சங்கம் கோரிக்கை*

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2.1 இல் இருந்து வகுப்பு ஒன்றுக்கு உள்வாங்குவதற்குரிய நிபந்தனையாக இருக்கின்ற 50 வயது எனும் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும். அத்துடன் சேவைக் காலத்திற்கு புள்ளிகள் கணிக்கும் போது எஞ்சிய காலம் ஆறு மாதங்களுக்கு மேல் இருக்குமாயின் அதற்கு ஒரு புள்ளி வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் இலங்கை ஆசிரியர் உரிமைகள் காக்கும் சங்கத்தின் விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு தொடக்கம் தகுதிகாண் மற்றும் பயிலுநர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருபவர்களுக்கான நியமனத் திகதியில் இருந்தே வழங்குதல் வேண்டும்.

தொழில் தகைமையுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் புள்ளி முரண்பாட்டை நீக்கவேண்டும்.

பட்டதாரி பயிலுநரென நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை நியமனம் வழங்கிய திகதியிலிருந்து நிரந்தரமாக்க வேண்டும் என்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு, பிரதமர் ரணில்,கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோருக்கும் இத் தீர்மானப் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

### - வடக்கு - கிழக்கு மாகாணத்தில் -
### 42 பாடசாலைகளுக்கு
# இணையத்தள வசதியுடன் கணினிகள்!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாடசாலை நூலகங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 42 பாடசாலைகளுக்கு இணையத்தள வசதிகளுடன் கணினிகள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்தி இணைப்பாளர் என். அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் 11 பாடசாலைகள், யாழ்.மாவட்டத்தில் 08 பாடசாலைகள், திருகோணமலை மாவட்டத்தில் 06 பாடசாலைகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் 05 பாடசாலைகள், வவுனியா மாவட்டத்தில் 04 பாடசாலைகள், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டத்தில் 03 பாடசாலைகள், கிளிநொச்சி மாவட்டத்தில் 01 பாடசாலை ஆகியவற்றிற்கும் இணையத்தள வசதிகளுடன் கூடிய கணினிகள் வழங்கப்படவுள்ளன.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, உடையார்கட்டு மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரியும், கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் மகா வித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டு கணினிகள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### - யாழ். குடாவில் காணாமற்போனோர் -
# அடுத்தகட்ட விசாரணை இம்மாத முடிவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் யுத்த காலத்தின் போது காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் தேவநேசன் நேசையா தலைமையிலான ஆணைக்குழு, இம்மாதம் 29,30,31 ஆம் திகதிகளில் தமது அடுத்தகட்ட விசாரணைகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவுள்ளது.

இக்குழு எதிர்வரும் 29ஆம் திகதி யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் விசாரணையை ஆரம்பிக்கும்.

## சத்திரசிகிச்சைநடைபெறாது

யாழ். போதனா மருத்துவமனையின் சத்திர சிகிச்சை நிபுணர்களால் இன்றும் நாளையும் டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை புதுக்குடியிருப்பில் மேற்கொள் எப்படவிருந்த இலவச சத்திர சிகிச்சை மேற்படி தினங்களில் நடைபெற மாட்டாது என அறிவிக்கப் பட்டுள்ளது. (பா)

## பரீட்சை நடைபெறாது

இன்றும், நாளையும் நடைபெறவிருந்த மெல்லக்கற்கும் மாணவர் நிலையறி பரீட்சை சில மாற்றங்கள் காரணத்தால் நடைபெறமாட்டாதென ஜி.ரி.இசற் திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்

## ஏப்ரல்...

2ஆம்திகதி தொடக்கம்15 ஆம் திகதி வரையிலும், ஒன்பதாவது சுற்றுப் பேச்சுவார்த்தை யூலை 15இல் இருந்து 18ஆம் திகதிவரை ஐரோப்பிய நகர் ஒன்றிலும் நடத்துவதென முடிவு செய்யப் பட்டுள்ளது.

## உள்ளூராட்சிச்...

தேர்தலில் போட்டியிடமுடியாது புதிதாகத்தான் நியமனங்கள் கொண்டுவரவேண்டும். ஆகவே இந்தப் பிரச்சினை இருக்காது.

வடக்கு - கிழக்கில் நாங்கள் புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைகளை பெருமளவில் 'சிரான்' என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளும் இந்த சூழ்நிலையில் வடக்கு- கிழக்கில் உள்ள இந்த உள்ளூராட்சி மன்றங்கள் செம்மையான முறையில் நிர்வகிக்கப்பட்டால் பல வேலைத் திட்டங்களை அந்த உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் செய்யலாம் என்ற நோக்கத்தில் தான் நாங்கள் இந்த உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு ஆதரவு வழங்குவது பற்றி பரிசீலனை செய்வோம் என முடிவு செய்திருக்கின்றோம். மேற்கொண்டு திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் இது சம்பந்தமாக தலைவருடன் கதைத்தும் மற்றது எமக்கு ஆதரவான அரசியல் கட்சிகளுடன் கதைத்தும் சில இறுதியான முடிவுகளை எடுப்பார்.

இதுபற்றி வேறு விபரங்களை இப்போது நாங்கள் சொல்ல விரும்பில்லை.

கேள்வி: பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட முடிவுகளில் எதை நீங்கள் முக்கியமாக கருதுகின்றீர்கள்?

பதில்: கடந்த ஆறு மாதங்களில் ஆறுசுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றன. இதில் மூன்று பரிமாணங்களில் இந்த முன்னேற்றத்தை பார்க்கவேண்டும்.

ஒன்று போர்நிறுத்தம் இரண்டாவது புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற மனிதாபிமான பிரச்சினைகள் மூன்றாவது - அரசியல் விவகாரம்.

இந்தப் போர்நிறுத்தத்தை எடுத்துக் கொண்டால் கடந்த ஒரு வருடமாக போர்நிறுத்தம் பேணப்படுகின்றது. அதாவது வட -கிழக்கில் அகில இலங்கை பூராகவும் அமைதி பேணப்படுகின்றது.

சில சம்பவங்கள் நடத்திருக்கலாம், ஆனாலும் போர்நிறுத்தக் கட்டுப்பாடு குலையவில்லை.

விடுதலைப்புலிகள் மிகவும் நிதானமாகவும், மிகவும் பொறுமையுடனும் இந்தப் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

எத்தனையோ ஆத்திரமூட்டும் சம்பவங்கள் நடந்தபோதும் போர்நிறுத்தத்தைமீறாது அமைதியைப் பேணி பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி வருகின்றோம். இது ஒரு முக்கியமான விடயம் விடுதலைப்புலிகளின் இந்த உறுதியான நிலைப்பாடு காரணமாகத்தான் தென்னிலங்கையில் கூட இப்பொழுது அமைதி நிலை காணப்படுகிறது. அங்கு பொருளாதார மேம்பாட்டுக்கான சில முயற்சிகள் நடைபெறுகின்றன.

உதாரணமாக உல்லாசப்பயணம் போன்ற துறைகளில் முன்னேற்றம் காணப்பட்டிருக்கின்றது. சிங்கள மக்கள் கூட நிம்மதியாக, அமைதியாக அங்கு வாழக்கூடியதாக இருக்கின்றது.

எங்களைப் பொறுத்த வரையில் இந்த ஒரு வருடகால போர் நிறுத்தத்தில் முக்கியமாக அமைதி நிலவுகின்றது. ஆனால், இயல்பு நிலை இன்னும் தோன்றவில்லை. இயல்பு நிலை என்று சொன்னால் யாழ்ப்பாணத்திலும், மற்றைய இடங்களிலும் கிட்டத்தட்ட நாற்பது ஆயிரம் படைகள் சிறிய பூகோள பகுதிகளை ஆக்கிரமித்து நிற்பதால் மக்கள் இப்பொழுது நிம்மதி இல்லாமல் வாழ்கின்றனர்.

ஆகவே, அமைதி - இயல்பு நிலை என்று பார்க்கும்போது இயல்புநிலை இன்னும் தோன்றவில்லை. பத்து லட்சம் மக்கள் வரைக்கும் தங்களது சொந்த வீடுகள், சொந்தக் கிராமங்கள், சொந்தக் குடியிருப்புக்களுக்கு திரும்பமுடியாமல் இருக்கின்றார்கள். இந்த வீடுகளில் இப்போது இராணுவம் ஆக்கிரமித்து இருக்கின்றது.

உயர்பாதுகாப்பு வலயம் மட்டுமல்லாமல், வெளியிலும் இராணுவஆக்கிரமிப்பு இருக்கின்றது. இதைப் பற்றி கடந்த ஆறு பேச்சுக்களிலும் இந்தப் பிரச்சினை எடுக்காமல் இல்லை.

எங்களுக்குச் சொல்லப்படுகின்றது - நாங்கள் சீக்கிரமாக செய்வோம் - அப்படியான ஒரு திட்டம் போட்டிருக்கின்றோம். இப்படியான காலவரை போட்டிருக்கின்றோம். ஜெனரல் நம்பியார் சில ஆராய்ச்சி செய்கின்றார். அவரின் அறிக்கைவரும் என்று சொல்லி - இப்படியே இந்தப் பிரச்சினை இழுபடுகின்றதே தவிர - இந்த மக்கள் தங்களது சொந்த இடத்துக்குத் திரும்பாதபடியால் தொடர்ந்தும் அவல நிலையும், இயல்புநிலை தோன்றாத நிலையும் காணப்படுகிறது.

இந்த பொருளாதாரத் தடை முற்றாக எடுக்கப்பட்டிருக்கின்றது. பொருளாதாரத் தடை எடுக்கப்பட்டதால் அத்தியாவசியப் பொருட்கள் வட-கிழக்கிற்கு வருகின்றது.

ஒரு சிறு அளவிலான விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் மேம்பாடுகள் ஏற்பட்டு வருகின்றது. மக்கள் போக்குவரத்தும் இப்பொழுது நடைபெற்று வருகின்றது.

இப்படியான சிறிய ஆக்கபூர்வமான சம்பவங்கள் இருக்கிறதே தவிர இந்தப் போர் நிறுத்தத்தால் இயல்புநிலை தோன்றவில்லை.

மனிதாபிமானப் பிரச்சினை என்று எடுத்துக் கொண்டால் 'சிரான்' எனும் அவசர மனிதாபிமான புனர்வாழ்வுப் பிரச்சனைக்கான உபகுழு நியமிக்கப்பட்டு அது இப்பொழுதுதான் வேலைகளைத் தொடங்கியிருக்கின்றது.

ஒரு நிதியம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதை உலக வங்கி ஏற்று அந்த நிதியச் செயற்பாடுகள் இந்த வாரத்தில் இருந்துதான் ஆரம்பமாக இருக்கின்றபடியால் இனித்தான் இந்த நிதி ஒதுக்கீடு 'சிரான்' என்ற அமைப்பு மூலமாக பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இனி படிப்படியாகத் தான் எமது மக்களின் புனர்வாழ்வுக்கும், புனர் நிர்மாணத்துக்கும் உதவக்கூடியதாக இருக்கும்.

அரசியல் விவகாரத்தை எடுத்துக்கொண்டால் - விடுதலைப் புலிகள் இயக்கம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சமஷ்டி சுயாட்சியை, ஒரு சமஷ்டி வடிவத்திலான பிரதேச சுயாட்சியை பரிசீலனை செய்வதற்கு ஆயத்தமான இருக்கின்றார்கள் என்று ஏற்கனவே முடிவெடுத்தோம். அதன் அடிப்படையில் சில விடயங்கள் இப்போது நாங்கள் கதைத்து வருகின்றோம்.

அதாவது, சமஷ்டி அமைப்பு என்று சொன்னால் இப்பொழுது மிகவும் சிக்கலான விடயம். தமிழ் மக்களுக்கு சமஷ்டி ஆட்சி முறை என்பது ஆழமாக தெரிந்த விடயம். ஏனென்றால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே சமஷ்டி கட்சி ஒன்று தோன்றி இந்தப் பிரச்சினை முன்வைக்கப்பட்டது. இதைப் பற்றி நீண்ட காலமாக தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக ஒரு தெளிவான நிலைமை இருக்கின்றது.

ஆகவே, சமஷ்டி ஆட்சி முறை என்றால் என்ன? தமிழர் தாயகத்தில் அப்படியான சுயாட்சி ஆட்சிமுறை வரவேண்டும். தமிழர்கள் தங்களது மண்ணில் தங்களை தாமே ஆளக்-கூடிய ஒரு நிர்வாகம் உருவாக வேண்டும் என்பதில் எமது மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள்.

அதிகமான சிங்கள மக்கள் சமஷ்டிக்கு இன்னும் எதிர்ப்பை தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். அதேவேளை எழுபது வீதத்துக்கு அதிகமான தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கின்றது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது நாங்கள் இதை எடுத்துச் சொன்னோம். அதாவது, நீங்கள் இங்கு வந்து சித்தாந்தங்களை கதைத்து ஒரு தீர்மானங்களை எடுத்துவிட்டுப் போவதில் அர்த்தம் இல்லை. ஏனென்றால் அங்கு பேச்சுக்களுக்கு பெரும் எதிர்ப்பு இருக்கின்றது.

அதாவது, அரசியல் கட்சிகள் சந்திரிகாவின் சுதந்திரக்கட்சி தொடங்கி எல்லோரும் சமாதானத்துக்கு எதிர்ப்புக் குரல் கொடுக்கின்றார்கள். சிங்கள பொதுமக்கள் மத்தியில் வந்து சமூக பொருளாதாரப் பிரச்சினைதான் மேலோங்கி நிற்கின்றதே தவிர தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கொடுக்க வேண்டும். இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இனப்பிரச்சிக்கு தீர்வு கண்டால் தான் இலங்கையில் பொருளாதார சுபீட்சம் ஏற்படும் என்ற தெளிவு ஒன்றும் அங்கு ஏற்பட்டிருக்கின்றது.

அரசாங்கம் தான் அத்தகைய ஒரு பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அடித்துச் சொன்னோம்.

ஆகவே, இந்த அரசியல் விவகாரம் பற்றியும் நாங்கள் கதைத்து வருகிறோம். சில முக்கியமான முடிவுகள் எடுக்கிறோம். அதாவது இந்த சமஷ்டி ஆட்சி முறைக்கு அடிப்படையான விடயங்கள் பற்றி அடுத்த முறை ஒரு பட்டியல் போட்டு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விடயத்தை கதைக்க முடிவெடுத்திருக்கிறோம்.

ஆகவே, இதிலும் பெருமளவு முன்னேற்றம் கண்டு கொண்டு தான் போகின்றது. அதேவேளையில் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் விவகார குழு ஒன்றை அமைத்திருக்கின்றது. இருபத்தொரு பேர் கொண்ட ஒரு அரசியல் விவகாரக்குழு இதில் 16பேர் அரசியல் பிரிவில் உள்ள உறுப்பினர்கள் இதில் அங்கம் வகிக்கின்றார்கள். மற்றய ஐந்து பேர் வெளிநாடுகளில் அரசியல் வேலை செய்பவர்களும் அரசியல் முதிர்ச்சி உள்ளவர்கள்.

இந்தக் குழு இந்த மாத முடிவில் இருந்து ஒரு உலக சுற்று பிரயாணத்தை மேற்கொள்ள விருக்கின்றது.

முதல் நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து, சுவிர்சர்லாந்து, ஜேர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம் என்று தொடர்ச்சியாக சமஸ்டி ஆட்சி முறை உள்ள நாடுகளுக்கும் மற்றைய நாடுகளுக்கும் விஜயம் செய்து இந்த அரசமைப்பைப் பற்றியும் அரச யாப்பு முறைகள் பற்றியும் சமஷ்டி முறை பற்றியும் இவர்கள் ஆராய்ச்சிகளை நடாத்துவார்கள்.

மேற்குலக சனநாயக முறை மேற்குலக அரசியல் ஆட்சிமுறை சமஷ்டி ஆட்சிமுறைபற்றிய ஒரு தெளிவான ஆழமான பார்வை எமது கொடுக்க இது வாய்ப்பாக இருக்கின்றது.

இந்தப் பயணத்திற்கு உதவி செய்ய பல நாடுகள் முன்வந்திருக்கின்றன. குறிப்பாக நோர்வே போன்ற நாடுகள்- இந்த ரீதியில் அரசியல் விவகாரம் முன்னேற்றம் காணப்படுகின்றது.

கேள்வி:- உதவி வழங்கும் நாடுகள் எதிர்பார்க்கும் வளர்ச்சி பேச்சுவார்த்தையில் ஏற்பட்டு இருக்கின்றதா?

சிங்கள மக்களினதும், வட-கிழக்கில் உள்ள தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னேற்றி செல்வதோடு பேச்சுவார்த்தையும் அதே சமநிலையில் முன்னேற்றம் காணவேண்டும் என ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி தெரிவித்துள்ளார்.

இவர் சொல்வதன் படி எமது மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தாமல் பிரச்சினையை தீர்க்க முடியாது.

எமது பகுதியில் அபிவிருத்திக்கு எழுபது நாடுகள் உத்தரவாதம் தந்திருக்கின்றன.

ஆகவே பேச்சு வார்த்தையின் முன்னேற்றம் காண்பது என்பதல்ல பிரச்சினை.பொருளாதார வாழ்வும் மேம்பட்டால் தான் நாங்கள் பேச்சுவார்த்தையை முன்னேற்றலாம்.

கேள்வி: முஸ்லிம்கள் தனித் தரப்பாக பங்குபற்றுவது தொடர்பாக இன்றைய கூட்டறிக்கையில் நேரடியாக குறிப்பிடாது விட்டாலும் கிளிநொச்சியில் விரைவில் முஸ்லிம் தலைவர்கள் வந்து பேச்சுக்கள் நடத்துவார்கள் என்று கூறியுள்ளீர்கள். அது எப்போது நடக்கும்?

திரு. ஹக்கீம் அவர்களுடன், நானும், கருணா அம்மானும், தமிழ்ச்செல்வனும் சந்தித்து நீண்ட நேரம் கதைத்தோம். அதாவது சில விடயங்களை அவர்களுடன் மனந்திறந்து கதைத்தோம்.

அதாவது விடுதலைப்புலிகள் ஒருபோதும் ஒதுக்கப் போவதில்லை. முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைகளை புறந்தள்ளப் போவதில்லை. முஸ்லிம் மக்களை நினைத்துத் தான் இந்த இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்பதில் உறுதியாய் இருப்போம். அதில் நீங்கள் வீணாக சந்தேகப்பட்டு கண்டபடி அரசியல் அறிக்கைகளை விடாதீர்கள். எங்களோடு சேர்ந்து வேலையைச் செய்யுங்கள் என்று சொன்னோம். கொழும்பில் இருந்து அறிக்கைகளை விட்டு கொண்டிருக்கிறதில் வேலையில்லை. கருணா அம்மான் கிழக்கில் உள்ளார். கிழக்கு மாகாணப் பிரச்சினைகளுக்கு அவரைச் சந்தித்துத் தீர்க்கலாம். அரசியல் பிரச்சினை என்றால் தலைவர் பிரபாகரன் உள்ளார். தமிழ்ச்செல்வன் இருக்கிறார். நானும் சில நேரம் அங்கு நிற்கிற நேரம் நீங்கள் உங்கட தலைவர்களைக் கூட்டிக்கொண்டுவாருங்கள் கதைப்போம்.

என்னைப் பொறுத்தவரை வட-கிழக்கு தமிழ் பேசும் ஒரு தாயகம் என்று இருக்கிறது. அதில் நீங்களும் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள். அந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு நாங்கள் தாயகத்தை அடிப்படையாக கதைத்து வருகிறோம். அதற்குள் முஸ்லிம் மக்களுக்கு எத்தகைய உரிமைகள், பாதுகாப்பு இப்படியான பல விடயங்கள் இருக்கிறது. அதைப் பற்றியும் கதைப்போம்.

அதாவது முஸ்லிம் காங்கிரஸ் தற்போது ஓரளவு ஒற்றுமையாக வருவதற்கு முயற்சிகள் நடக்கிறது. இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சனாதிபதியையும் சந்திக்கிறார்கள். அவர்களிடம் கேட்கிறார்கள் நாங்கள் தன்னிச்சையாக சுயகுழுவாகப் போக வேண்டும் என்று. அப்போது நாங்கள் சொன்னோம். இவர்களிடம் கேட்டால் பிரயோசனம் இல்லை. ஏனென்று சொன்னால் இவர்களிடம் நீங்கள் எப்போதும் போய்க் கதைக்கலாம். நீங்கள் தனிக்குழுவாக எங்களது பேச்சுவார்த்தை மேசைக்கு வருவது என்றால் எங்கட அனுமதி இருந்தால்தான் நீங்கள் வரலாம். ஏனென்று சொன்னால் இது வந்து 25 ஆண்டு காலப் போராட்டத்தின் விளைவாக இரண்டு பிரதான சக்திகள், ஒரு அரசும் ஒரு விடுதலை இயக்கமும் பேச்சுக்களை நடாத்த இதில் முஸ்லிம்களை ஓரங்கட்டி ஒதுக்கவில்லை. ஆனால் முஸ்லிம் பிரச்சினை பேசப்படும் போதுதான் நீங்கள் வரலாம். மற்றும்படி மூன்று தரப்பு பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு நாங்கள் 25 ஆண்டு காலமாக இரத்தம் சிந்தி போராடவில்லை. எமது மக்களின் உரிமைக்காக

அதேவேளை முஸ்லிம் மக்களையும் நாங்கள் எங்களுடைய மக்களாகத்தான் பார்க்கிறோம். அவர்களைப் புறம்தள்ள மாட்டோம். ஏனென்றால் அவர்கள் மொழியால் ஒன்றுபட்ட மக்கள். பொருளாதார வாழ்வால் ஒன்றிணைந்த மக்கள். பிரதேசத்தால் ஒன்றிணைந்த மக்கள். ஆகவே அந்த மக்களையும் இணைத்துக் கொண்டுதான் நாங்கள் ஒரு சுயாட்சி வடிவத்தில் ஒரு தீர்வைக் காணலாம். ஆகவே நீங்கள் அச்சங் கொள்ளாது சந்தேகங் கொள்ளாது கருணா அம்மானையும் தமிழ்ச்செல்வனையும் சந்திக்கலாம்.

ஆகவே, இவர்கள் சந்தோசமாக செல்கின்றனர். ஏனென்றால் தங்களை புலிகள் அங்கீகரித்து தங்களை விரைவாக கூப்பிடப்படும். எப்போது என்ன திகதி என்று இன்னும் தீர்மானிக்கவில்லை முதலில் இவர்களை கூப்பிட்டுக் கதைப்போம் நோர்வே அரசாங்கத்துடனும் கதைத்து முஸ்லிம் மக்களின் பிரச்சினை எடுத்துக் கொள்ளும்போது வெகுவிரைவில் காலம் தாழ்த்தாது அவர்களை கூப்பிட்டுக் கதைப் போம்.

முதல் தடவையாக அவர்களிடம் காணிப் பிரச்சினை இருக்கிறது கிழக்கு மாகாணத்தில் இந்தக் காணிப் பிரச்சினையை விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத்தில் கருணா அம்மானைச் சந்தித்து பேசி முடிவைக் காணட்டும். அதற்குப் பிறகு அரசியல் பிரச்சினையை எங்களுடைய தலைமைப்பீடத்துடன் வந்து கதைத்து அவர்களுக்கென்று ஒரு கால அட்டவணை ஒதுக்கி அவர்களைப் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளச் செய்வதென அவர்களோடு கதைத்து முடிவெடுத்துள்ளோம். அவர்களும் திருப்திகரமாகப்போகிறார்கள்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.